சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

அசல் வழக்கு எண்.199/2015

c/w

அசல் வழக்கு எண்.400/2015

**PW 1 சக்தி கண்ணன்** **01.12.2025**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

அ.வ.எண்.400/2015 வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என கேட்டால் மின் இணைப்பு எண் 97 எனது பெயரில் மாற்றப்பட்டுவிட்டது, அது செல்லாது என அறிவிக்க கோரி அவர் வழக்கு தாக்கல் செய்துள்ளார். க.ச.எண்.191/ 2A என்ற காலையானது கூட்டு பட்டாவாகத்தான் உள்ளது என சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பட்டாவானது புலஎண்.191/2A க்கான பட்டா என சொன்னால் சரிதான். அது **பிவாசாஆ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் வரைபடம் புலஎண்.191/2A க்கான வரைபடம் என சொன்னால் சரிதான். அது **பிவாசாஆ 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த வரைபடத்தில் வடகிழக்கு மூலையில் கிணறு, 7 1/2 HP மோட்டார் பம்ப் மற்றும் அதற்குண்டான மின் இணைப்பு உள்ளது என்று சொன்னால் அது பொதுவில் உள்ளது, மின் இணைப்பு மட்டும் எனது பெயரில் உள்ளது. கிணறும், மோட்டார் பம்பும் பொதுவில் உள்ளது. அ.வ.எண்.400/2015 வழக்கின் எதிர்வழக்குரையில் பத்தி 8 ல் குறிப்பிட்டுள்ள 15.03.2013 தேதியிட்ட கிரய பத்திரம் பற்றி தெரியும் என கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 15.03.2013 தேதியிட்ட கிரயபத்திரத்தின் சான்று நகல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகிறது. அந்த ஆவணம் **பிவாசாஆ 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாசாஆ 5 பாக சாசனத்தில் பாகஸ்தர்கள் மூவருக்கும் மேலே குறிப்பிட்ட கிணறு, 7 1/2 HP மோட்டார் பம்ப் செட், மின் இணைப்பு எண்.97 ஆகியவற்றில் மூவருக்கும் தலா 2/6 பங்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வாசாஆ 2 ஆவணத்தில் ஸ்ரீரங்கம்மாள் நாகராஜ் அவர்களுக்கு கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் மேலே குறிப்பிட்ட கிணறு, 7 1/2 HP மோட்டார் பம்ப் செட், மின் இணைப்பு எண்.97 ஆகியவற்றில்

4/18 பங்கு குறிப்பிட்டு செட்டில்மெண்ட் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான், அதைபொறுத்து செல்லாது என நாங்கள் நீதிமன்றத்தில் பரிகாரம் கோரியுள்ளோம். வாசாஆ 3 ஆவணத்தில் ஸ்ரீரங்கம்மாள் நாகராஜ் அவர்களுக்கு கொடுத்த இன்னொரு செட்டில்மெண்ட் குறிப்பிட்ட கிணறு, 7 1/2 HP மோட்டார் பம்ப் செட், மின் இணைப்பு எண்.97 ஆகியவற்றில் 2/18 பங்கு குறிப்பிட்டு செட்டில்மெண்ட் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான், அதைபொறுத்து செல்லாது என நாங்கள் நீதிமன்றத்தில் பரிகாரம் கோரியுள்ளோம். கனகராஜ் அவர்கள் கிரயம் பெற்ற ஆவணத்தில் (வாசாஆ 4 ல்) கிணறு, 7 1/2 HP மோட்டார் பம்ப் செட், மின் இணைப்பு எண்.97 ஆகியவற்றில் 1/3 பங்கு குறிப்பிட்டு கிரயம் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான், ஆனால் அந்த ஆவணம் செல்லாது என பரிகாரம் கோரியுள்ளோம். மேலும் மேற்கண்ட கிரய பத்திரத்தில் கிணறு, மின்மோட்டார் அதற்கு வைப்பீடு செய்த தொகை (ரூ.26,000/-) குறிப்பிட்டு தான் கிரயம் பெறப்பட்டது என சொன்னால் சரிதான். பிவாசாஆ 7 ல் அதாவது கிரயம் பெற்ற ஆவணத்திலும் கிணறு, 7 1/2 HP மோட்டார் பம்ப் செட், மின் இணைப்பு எண்.97 ஆகியவற்றில் 1/3 பங்கு குறிப்பிட்டு கிரயம் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதிலும் மேற்கண்ட கிணறு மோட்டார், மின் இணைப்பு ஆகியவற்றிற்கு ரூ.36,000/- மதிப்பிட்டுதான் கிரயம்பெற்றுள்ளார் என்று சொன்னால் சரிதான். மேற்கண்ட இரண்டு கிரய ஆவணங்களின் படி மேலே குறிப்பிட்டுள்ள கிணறு, 7 1/2 HP மின் மோட்டார் பம்ப், மின் இணைப்பு எண்.97 கனகராஜுக்கு 2/3 பங்கு கிடைக்கிறது என்று சொன்னால் சரியல்ல. மேற்கண்ட கிரய ஆவணங்களை பற்றி எனக்கு நன்கு தெரியும் என்றும் தற்போது வழக்கிற்காக கனகராஜுக்கு 2/3 பங்கு கிடைக்காது என்று சொன்னால் சரியல்ல. மின்

இணைப்பு எந்த அடிப்படையில் நான் மாற்றினேன் என கேட்டால் பொது மனிதர்கள் எனது பெயரில் மின் இணைப்பை மாற்றிகொள்ள கூறினார்கள், அதன் பெயரில் நான் மாற்றிகொண்டேன். கனகராஜ் பொது மனிதர்கள் மூலமாக NOC எனக்கு கொடுத்தார், அதன் பெயரில் நான் எனது பெயரில் மாற்றிகொண்டேன். மேற்கண்ட NOC ல் யார் யார் கையெழுத்து செய்தார்கள், அது நோட்டரி செய்யப்பட்டிருந்ததா? என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. NOC கொடுக்கப்பட்டதற்காக கனகராஜுக்கு பணம் ஏதாவது கொடுத்தேனா? என்றால் பணம் கொடுக்கவில்லை. கனகராஜ் NOC எதுவும் கொடுக்கவில்லை என்றும் நானே ஆவணத்தை தயாரித்து மின் இணைப்பு கொடுத்தேன் என்றால் சரியல்ல. பொதுமனிதர்கள் யார்யார் இருந்தார்கள் என குறிப்பிட்டு எனது எதிர் வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பைசல்தாரர்கள் விபரத்தை பொறுத்து எதிர் வழக்குரையில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். பைசல் எதுவும் நடக்கவில்லை என்றும் பொது மனிதர்கள் யாரும் இருக்கவில்லை என்றும் கனகராஜ் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. கனகராஜ் ரூ.60,000/- கொடுத்துதான் மேலே குறிப்பிட்ட கிணறு சம்பந்தப்பட்ட பாத்தியங்களை பெற்றுள்ளார் என்றும் எவ்வித பிரதிபிரயோஜனம் இன்றி NOC கொடுத்தார் என்று சொல்வது ஏற்றுகொள்ளதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. கனகராஜ் என்மீது ஒரு புகார் கொடுத்து அது குற்றவியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்று சொன்னால் அது சரிதான். நான் மின் இணைப்பை பெயர் மாற்றம் செய்வதற்கு பெறப்பட்ட NOC பெறுவதில் மோசடி செய்துவிட்டேன் என்று கூறிதான் புகார் கொடுத்து அதன் பேரில் வழக்கு நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான்,

வழக்கை நடத்தி வருகிறேன். 2013 ல் நாங்கள் குடும்பத்திற்குள் ஒரு பாக ஆவணம் (பிவாசாஆ 1) ஏற்படுத்திக்கொண்டோம் என்று சொன்னால் சரிதான். அந்த பாக சாசனத்தில் தரப்பினர் அனைவருக்கும் 1/6 பங்கு ஒதுக்கி எழுதிக்கொள்ளப்பட்டது என்று சொன்னால் சரிதான். எனது தாயார் 2023 ம் வருடத்தில் ஸ்ரீராம் பைனான்ஸில் ஒரு அடமான கடன் பெற்றிருந்தார் என்று சொன்னால் சரிதான். அதில் 191/2 ஏ காலையில் உள்ள கிணறு, 7 1/2 HP மின் மோட்டார், மின் இணைப்பு எண்.97 ஆகியவற்றில் 1/6 பங்கு அதை குறிப்பிட்டுதான் அடமான வைத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். யாருமே NOC கொடுக்கவில்லை என்றும் கிணறு, 7 1/2 HP மின் மோட்டார், மின் இணைப்பு எண்.97 கனகராஜுக்கு 2/3 பங்கும் என் தாயாருக்கு 1/6 பங்கு 2023 வரை அவ்வாறே இருந்த காரணத்தினால் தான் எழுதிகொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மோசடியாகத்தான் மின் இணைப்பில் பெயர் மாற்றம் செய்தேன் என்றும் கனகராஜ் எழுதிகொடுக்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. ஆகவே வாதி கோரியவாறு விளம்புகை பரிகாரம் கொடுக்கவேண்டும் என்று சொன்னால் அது சரியல்ல. கனகராஜ் கோரியுள்ளவாறு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்க வேண்டும் என்று சொன்னால் அது சரியல்ல. அ.வ.எண்.199/2015 என்ற வழக்கானது நிலைக்கதக்கதல்ல என்றும் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் அது சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி